

வங்கக் கடலில் ஆழ்ந்த காற்றமுத்தத் தாழ்வு மண்டலம் உருவாக வாய்ப்பு உள்ளதை முன்னிட்டு மேற்கொள்ளப் படவேண்டிய ஆயத்த நடவடிக்கைகள் குறித்து வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் சென்னை எழிலகத்தில் உள்ள மாநில அவசரகால செயல்பாட்டு மையத்தில் காணொலி காட்சி வாயிலாக கடலூர், விழுப்புரம், திருவண்ணாமலை, செங்கல்பட்டு, காஞ்சிபுரம், திருவள்ளூர், சென்னை மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் மாநகராட்சி ஆணையர்களுடன் ஆய்வு மேற்கொண்டார். இந்த ஆய்வின்போது கூடுதல் தலைமைச் செயல முனைவர் எம். சாய் குமார், பேரிடர் மேலாண்மை ஆணையர் சிஜி தாமஸ் வைத்யன், பேரிடர் மேலாண்மை இயக்குநர் சி.முத்துக்குமரன், மற்றும் அலுவலர்கள் உடனிருந்தனர்.

### அரசியலமைப்புச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள

# கூட்டாட்சியியலை நிலைநிறுத்துவதற்கு தேவையானவற்றை மேற்கொள்வோம்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப் பதிவு!

சென்னை, நவ. 28-


இந்த அரசியலமைப்புச் சட்ட நாளையொட்டி தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளங்களில் வெளியிட்டுள்ள பதிவு வருமாறு:-

**இந்தியா என்பது ஒரு பண்பாட்டுக்கோ ஒரு கருத்தியலுக்கோ மட்டுமானதல்ல, அதன் மக்கள் அனைவருக்குமானது. பாபாசாகேப் அம்பேத்கரின் இந்த பரந்த பார்வையைச் சுருக்க முயற்சிக்கும் அனைத்து சக்திகளுக்கும் எதிராகப் போராடும் நமது மனவுறுதியை இந்த அரசியலமைப்புச் சட்ட நாளில் மீண்டும் உறுதிகூறுகிறோம்.**

**நமது அரசியலமைப்புச் சட்டத்தில் வரையறுக்கப்பட்டுள்ள கூட்டாட்சியியலை நிலைநிறுத்தவும், அனைத்து மாநிலங்களின் உரிமைகளையும் பாதுகாக்கவும் தேவையான அனைத்தையும் மேற்கொள்வோம்.**

**நமது அரசியலமைப்புச் சட்டம் உறுதியளிக்கும் நீதி, சுதந்திரம், சமத்துவம் மற்றும் சகோதரத்துவத்தைக் கண்டு அஞ்சுபவர்களிடம் இருந்து நமது குடியரசைக் காப்பதே அரசியலமைப்புச் சட்டத்துக்கு நாம் செலுத்தும் உண்மையான மரியாதை!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தமது வலைதளத்தில் பதிவிட்டுள்ளார்..




# மாவீரன் பொல்லான் சிலை : முதல்வர் திறந்து வைத்தார்!

முதல் பக்கத் தொடர்ச்சி...

தீரன் சின்னமலையின் நம்பிக்கைக்குரிய படைத்தளபதி சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அவர்களின் முழு திருவுருவச் சிலையுடன் கூடிய அரங்கம் அமைக்கப் பட்டு, முதலமைச்சர் அவர்களால் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது. பின்னர், மாவீரன் பொல்லான் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தி, அரங்கத்தை பார்வையிட்டார்.

**பொல்லான் வாரிசுதாரர்களுக்கு முதல்வர் சிறப்புச் செய்தார்!**

அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அவர்களின் வாரிசுதாரர்கள் - வரதராஜன், முருகன், வீரன், பழனிச் சாமி, ராஜன் ஆகியோருக்கு சால்வை அணிவித்து சிறப்பு செய்தார்.

பின்னர், சுதந்திரப் போராட்ட வீரர் மாவீரன் பொல்லான் அவர்களின் வாரிசுதாரர்கள் மற்றும் பயனாளிகளுக்கு தமிழ் நாடு முதலமைச்சர் அவர்கள் பூமிதான வாரிய நில விநியோக பத்திரங்களை வழங்கினார்.

மாவீரன் பொல்லான் அவர்களின் முழு திருவுருவச் சிலை யுடன் கூடிய அரங்கத்தை திறந்து வைத்தமைக்காக, ஆதித் தமிழர் பேரவையின் நிறுவனத் தலைவர் இரா. அதியமான், நிர்வாகி கு. ஜக்கையன், தமிழ் புலிகள் கட்சியின் நாகை திரு வள்ளுவன், திராவிட தமிழர் கட்சியின் திருமதி வெண்மணி, தமிழ்நாடு அருந்ததியர் இளைஞர் முன்னணியின் எஸ்.டி. கல்யாண சுந்தரம், சண்முகம், சமூகநீதி மக்கள் கட்சியின் (மாவீரன் பொல்லான்) வடிவேல் ராமன், விடுதலை வேங் கைகள் கட்சியின் இரா. தமிழன்பன், தமிழ் சிறுத்தைகள் கட் சியின் சு. அகத்தியன், தமிழ்நாடு பெஸ்ட் ஆசிரியர் அரசு ஊழியர் கூட்டமைப்பின் எல். ரவி, தமிழ்நாடு சாக்கிய அருந் ததியர் சங்கத்தின் எழுத்தாளர் மதிவண்ணன், அருந்ததிய சமூக சேவை மடத்தின் செல்லகுமார், சமூக விடுதலை கட்சி யின் என்.பி. ஆறுமுகம், திராவிடர் விடுதலை கட்சியின் அன்பு மகேஷ், அருந்ததி மக்கள் கட்சியின் சுப்பிரமணி, தாஸ்கோ அமைப்பின் பெருமாள்ராஜ்;

கொங்குநாடு திராவிடக் கட்சியின் ஏ.ஜி. பாட்டன் சக்தி வேல், தென்னாட்சி மக்கள் கட்சியின் சின்னதம்பி, அறம் மக் கள் கட்சியின் எல்.எம். காமராஜ், அருந்ததியர் விடுதலை முன்னணியின் என்.டி.ஆர்., நமது தேசம் கட்சியின் என். லஷ்மிபதி, அருந்ததியர் மக்கள் நலச் சங்கத்தின் சீனிவாசன், இந்திய சன சங்கத்தின் பேராசிரியர் முத்துசாமி, துரைசாமி, ஜனநாயக மக்கள் கழகத்தின் அசோக் கண்ணன், தமிழ் நாடு அருந்ததியர் சங்கத்தின் கண்ணன், மதுரை வீரன் மக் கள் விடுதலை இயக்கத்தின் பி. ஆறுமுகம், தமிழர் சமூகநீ திக் கழகத்தின் சுரா. தங்க பாண்டியன், மக்கள் விடுதலைக் கழகத்தின் ஆர். சீனிவாசராகவன், சமூக விடுதலை முன்ன ணியின் இராஜசேகரன், தலித் விடுதலை இயக்கத்தின் கிச்சா, தமிழ்நாடு அருந்ததியர் சங்கத்தின் கே.ஏ. வரதராஜன், திராவிட சமத்துவ கட்சியின் அம்பேத் அண்ணாதுரை, தமி ழர் தொழிலாளர் கட்சியின் மாகாளியப்பன், இந்திய குடியரசு கட்சியின் செபஸ்டியன், YGS மாநிலத் தலைவர் சி. பெரு மாள்;

கொங்கு விடுதலை புலிகள் கட்சியின் எஸ். விஸ்வநாதன், திராவிட எழுச்சி பேரவையின் தலைவர் சக்திவேந்தன், சமூக நீதி பாதுகாப்பு கழகத்தின் ஆர். முத்துராஜ், அருந்ததியர் மக்கள் முன்னேற்றக் கழகத்தின் ஆவடி ரங்கநாதன், அருந்த தியர் மக்கள் கட்சியின் இராமச்சந்திரன், அனைத்துலக அருந்ததியர் மக்கள் பேரவையின் ரமேஷ், அருந்ததியர் விடு தலைக் கழகத்தின் முனைவர் இளந்தமிழன், அருந்ததி கட்சி யின் பி. புருசோத்தமன், ஜெய்பீம் மக்கள் கட்சியின் அறிவழ கன், திராவிட புரட்சி கழகத்தின் சவுந்திர பாண்டியன், நாத்திக ராவணன், ஆதித் தமிழர் ஜனநாயக பேரவையின் அ.சு. பவுத்தன், அருந்ததியர் ஆசிரியர் அரசு பணியாளர் கூட்ட மைப்பின் இரா. பால்ராஜ், அருந்தமிழர் முன்னேற்ற பேர வையின் பொன்னுசாமி, ஜெய்பீம் விடுதலை கட்சியின் ஆறுமுகம் உள்ளிட்ட பல்வேறு அமைப்பின் நிர்வாகிகள் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

இவ்விழாவில், நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என். நேரு, பொதுப்பணித் துறை அமைச்சர் எ.வ. வேலு, வீட்டுவசதி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு. முத்துசாமி, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், ஆதிதிராவிடர் நலத் துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், மனிதவள மேலாண்மைத் துறை அமைச்சர் திருமதி. என்.கயல்விழி செல்வராஜ், நாடாளுமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் செல்வ ராஜ், கே.இ. பிரகாஷ், மாதேஸ்வரன், சட்டமன்ற உறுப்பி னர்கள் வி.செந்தில்பாலாஜி, வி.சி.சந்திரகுமார், ஏ.ஜி. வெங்க டாசலம், ஈ.ஆர். ஈஸ்வரன், ஆதிதமிழர் பேரவையின் நிறுவ னத் தலைவர் அதியமான் உள்ளிட்ட பல்வேறு அமைப்புக ளின் தலைவர்கள், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித்துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் எஸ். கந்தசாமி, தூய்மைப் பணியாளர் நல வாரியத்தின் தலைவர் டாக்டர் திப்பம்பட்டி வெ.ஆறுச்சாமி, துணைத் தலைவர் திருமதி கனிமொழி பத்மநாபன், மாவீரன் பொல்லான் அவர்களின் வாரிசுதாரர்கள், உள்ளாட்சி அமைப் புகளின் பிரதிநிதிகள், அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



கழக சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு சார்பில் செயலாளர் டாக்டர் சுபேர்கான் தலைமையில் நடைபெற்ற துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாள் விழாவில் அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி நல உதவிகள் வழங்கினார்.

# குஜராத்திகளுக்கு இந்திமொழி வெளிநாட்டு மொழியாகும்!

## குஜராத் உயர்நீதிமன்றம் அறிவிப்பு!

அகமதாபாத், நவ.28-

குஜராத் மாநில மக்களுக்கு இந்தி மொழி அந்நியமொழி (வெளிநாட்டு மொழி) என்று குஜராத் உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

குஜராத் மாநில அரசு நடத்தும் தொடக்கப் பள்ளிகளில் கூட குஜராத் மொழிதான் கற்பிக்கப்படுகிறது என்று உயர்நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் இந்தி மொழியில் அறிவிக்கை ஒன்றை வெளியிட்டதை எதிர்த்து ஜூனாகந்த் விவசாயிகள் தொடர்ந்த வழக்கில் நடைபெற்ற விவாதத்தின் போது மேற்கண்ட கருத்தை உயர்நீதிமன்றம் வெளியிட்டது.

2006 ஆம் ஆண்டு இந்திய. தேசிய நெடுஞ்சாலை ஆணையம் ஏற்கனவே உள்ள இருவழிப்பாதையை 4 வழிப்பாதையாக மாற்ற திட்டமிட்டிருந்தது. பல்வேறு காரணங்களால் பைபாஸ் பாதை கடந்த ஆண்டு மாற்றப்பட்டது.



THE TIMES OF INDIA
CITY

Hindi is a foreign language for Gujaratis, says Gujarat high court

TNN | Jan 1, 2012, 05.34 AM IST

AHMEDABAD: The Gujarat high court has said that Hindi is a foreign language for Gujaratis. Even the state government-run primary schools teach in Gujarati, the court said.

The high court made the observations in a case filed by farmers from Junagadh objecting to the National Highways Authority of India (NHAI) publishing a notification in Hindi. In 2006, the NHAI planned to widen the existing two-lane national highway 8D to four lanes. The alignment of the bypass was changed last year on various grounds.




# தி.மு.க. இளைஞர் அணி

## இடங்கணசாலை நகரத்துக்கு உட்பட்ட பாக அமைப்பாளர்கள் நியமனம்

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

**கழகத் தலைவர் - மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் உத்தரவின் பேரில், தலைமைக் கழக ஒப்புதலுடன், ஒன்றியத்துக்கு உட்பட்ட கிளைகள், நகர-பகுதி-பேரூர் வட்டங்கள் மற்றும் அனைத்து பாகங்களிலும் அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டு வருகின்றனர். அந்த வகையில், சேலம் மேற்கு மாவட்டம், சங்ககிரி சட்டமன்றத் தொகுதிக்கான நிர்வாகிகளின் அறிவிப்பு ஏற்கனவே வெளியான நிலையில், இடங்கணசாலை நகரத்தில் விடுபட்ட பாக அமைப்பாளர்கள் கீழ்க்கண்டவாறு நியமிக்கப்படுகின்றனர். ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட நிர்வாகிகள் இவர்களுடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.**

### சேலம் மேற்கு மாவட்டம் - சங்ககிரி சட்டமன்றத் தொகுதி

**இடங்கணசாலை நகரம்**

**பாக அமைப்பாளர்கள் :**

பாகம் – 244 : ஆ.வெங்கடேஷ், 9/2/1, மாட்டையாம்பட்டி, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 245 : ர.மோகன்குமார், 1/293, மாட்டையாம்பட்டி, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 246 : வ.ஜெகநாதன், 2–182, தூதனூர், இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 247 : ம.சிவகுமார், 6/76, மேட்டுக்காடு, கொசவப்பட்டி, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 248 : மு.கோபால், 54, சிட்டனூர், இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 249 : வ.மதியழகன், 3–109, பிள்ளையார் கோயில் அருகில், இ.காட்டூர், இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 250 : கா.விஷ்ணு, 3–337, மட்டக்காரன் வீதி, கே.கே. நகர், இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 251 : வி.வெங்கடேசன், 130/125, கே.கே. நகர், இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 252 : மா.எழிலரசன், 256–ஏ, கே.கே. நகர், இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 253 : சு.தியாகராஜன், 6/389–ஏ, கே.கே. நகர், இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 254 : த.பவித்ரன், 6–140, பரமகவுண்டனூர், இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 255 : ப.மணிதேவன், 215, கொசவப்பட்டி, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 256 : மு.தினேஷ்குமார், 9/381, ஏழுமாத்தனூர், இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 257 : மோ.தனுஷ், 10–9–கே, கிழக்கு புளியம்பட்டி, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 258 : கி.அகிலன், 9/124, நல்லணம்பட்டி, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 259 : கா.சின்னத்தம்பி, 18/19, சித்தர் கோயில், இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 260 : செ.பிரகாஷ், 18/69, நல்லணம்பட்டி காட்டுவளவு, அப்பாச்சிவளவு, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 261 : கு.சிவபிரகாஷ், 10/51, கிழக்கு புளியம்பட்டி, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 262 : ச.ஹரிபிரகாஷ், 17/75, செட்டியார் தெரு, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 263 : கு.விஜய், 11/72–49, வடக்குத் தெரு, காடையாம்பட்டி, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 264 : ப.சுசிந்திரன், 13/508–ஏ, பாப்பாபட்டி, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 265 : சி.ராஜசேகர், 14/232/என்.ஏ, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 266 : ம.செல்வராஜ், பாப்பாபட்டி காட்டுவளவு, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 267 : தி.சூர்யா, 13/285, பழக்காரத் தோட்டம், மோட்டூர், இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 268 : ர.மெய்யழகன், 27/15, ராசிகவுண்டனூர், இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 269 : ச.பிரகாஷ், 16/13/129, மெய்யனூர் காட்டுவளவு, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 270 : க.ராமலிங்கம், 437/13, சக்தி மாரியம்மன் கோயில் தெரு, கிழக்கு கோனேரிப்பட்டி, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 271 : சி.கோகுல்ராஜ், 12, பி.கே.எஸ். நகர், கோனேரிப்பட்டி, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 272 : கு.மணிகண்டன், 286, கொத்தனாங்காடு, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 273 : ம.கணபதி, 347, ஆசாரிப் பட்டறை, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.
பாகம் – 274 : கோ.கோகுல், 124/62, வடக்குத் தெரு, இடங்கணசாலை, சங்ககிரி, சேலம்.

அன்பகம்
சென்னை – 18
நாள் : 26–11–2025

**உதயநிதி ஸ்டாலின்**
செயலாளர்
தி.மு.க. இளைஞர் அணி